**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>13.10.2025.</u>**

OS. No. 235/2012

பக்கம் 2

DW1 – ஜெயந்தி

**<u>வாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்து மாஞ்சேரி கிராமத்தில் உள்ளதா என்றால் அந்த விவரம் என்னுடைய கணவருக்கு தான் தெரியும். ஆனால் குன்றத்துார் வட்டத்தில் உள்ளது. தாவா சொத்தின் புல எண், மனை எண், எவ்வளவு விஸ்தீரனம் என்று என்னுடைய கணவருக்குதான் தெரியும். சொத்து ஆதியில் வெங்கடேஷ் என்பருக்கு பாத்தியபட்டது. அவர் யாரிருமிருந்து வாங்கினார் என்று தற்போது ஞாபகமில்லை. வெங்கடேஷ் என்ற நபருக்கு தாவா சொத்து முதலில் பாத்தியப்பட்டது என்ற ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது பெயரிலுள்ள கிரைய ஆவணத்தையாவது தாக்கல் செய்துள்ளோனா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகமில்லை. வெங்கடேஷ் எந்த உரிமையில் தாவா சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய கணவருக்கு தெரியும்.

(குறுக்கு வவிசாரணைக்காக வாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.